

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் ஏற்பாட்டில் அறந்தாங்கி நகரத்தில் உள்ள 7000 குடும்பத் தலைவிகளுக்கு இல்லம் தேடி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, முதற்கட்டமாக அறந்தாங்கி நகரம் பாகம் 39 ல் நடைபெற்றது. இதில் குடும்பத் தலைவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் சுப.த.திவாகரன், உதயம்சண்முகம், பொன்.கணேசன், சக்தி இராமசாமி, வே.பொன்துரை, தி.முத்து, ஹரி விமலாதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், கருங்கல் பாளையத்தில் கேபிள் ஆர். செந்தில்குமார் ஏற்பாட்டில் 5 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், பகுதி கழக செயலாளர்கள் குறிஞ்சி என். தண்டபாணி, அக்னி டி.சந்திரசேகரன், மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி, வட்ட செயலாளர் கே.டி.மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள் விழா: தென்றல் செல்வராசு ஏற்பாட்டில்

# பொள்ளாச்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர்த் தொட்டி திறப்பு!

## மயூரா சுப்பிரமணியம் – சியாமளா நவநீத கிருஷ்ணன் – எஸ்.கௌதமன் பங்கேற்பு!

பொள்ளாச்சி, டிச. 21-

தமிழகத்தின் துணை முதல்வர் இளைஞர்களின் விடிவெள்ளி கழக இளைஞர் அணி செயலாளர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஏற்பாட்டில் பொள்ளாச்சி தெற்கு நகர செயலாளர் அமுதபாரதி தலைமையில், மாவட்ட அவைத்தலைவர் மயூராசுப்ரமணியம், நகர மன்றத் தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகரத் துணைச் செயலாளர்கள் நாச்சிமுத்து, பாத்திமா அக்பர், வட்டச் செயலாளர் சதீஸ் ஆகியோர் முன்னிலையில், வட்ட செயலாளர் ஜெயிலாபுதீன் வரவேற்புரையில், நகர்மன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக குடிதண்ணீர் தொட்டியினை திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மருதராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ. செந்தில்குமார், மாணிக்கராஜ் , சிறப்பு நகர மன்ற உறுப்பினர் முருகானந்தம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மணிமாறன் தென்றல், திருமலை ராஜா, மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் அவினாஷ் கார்த்திக், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் எம்வி ஜெயக்குமார், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.வி.ஆறுமுகம், இலக்கியம் ராஜ்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் நவீன், நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சரவணக்குமார், நகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சிட்டிடிவி உசேன், வட்டச் செயலாளர்கள் தர்மலிங்கம், ஜெயச்சந்திரன், விஜயகுமார், போஜராஜன், பேங்க் விஜயன், கோட்டாம்பட்டி பி.மாணிக்கம், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற மாவட்ட துணைச் தலைவர் பிரதீப், முன்னாள் மாவட்டக் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் மலர் பாலு, வட்ட பிரதிநிதிகள் ரஞ்சித், குமார் ராஜ், சிவசாமி, ஆடிட்டர் பிரகாஷ், தெற்கு நகர கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் மகேந்திரன், தெற்கு நகர தொண்டரணி துணை அமைப்பாளர் தாஸ் பிரபு, தெற்கு நகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மணி, தகவல் தொழில்நுட்ப அணி விக்னேஷ் பிரபு, நகர மாணவரணி துணை அமைப்பாளர் முகமது பைசல் ரகுமான், CTC ஹரி ராஜா, சுதீஷ் ராஜ், ராதாகிருஷ்ணன், ஊத்துக்குளி அரவிந்த், கேரம் ரபி, ரியாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

இறுதியில் இரும்புக் கடை சுப்பிரமணியம் அனைவருக்கும் நன்றி கூறினார்

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், டிச. 21–

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



சேலம் மேற்கு மாவட்ட தி.மு. கழக அவசர செயற்குழு கூட்டம் இன்று (21.12.2025 – ஞாயிற்று கிழமை) காலை 10.00 மணியளவில், மகுடஞ்சாவடியில் உள்ள, ஆர்.கே.திருமண மண்டபத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் – முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.

2) 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசின் நாசகாரச் செயலையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.கவையும் கண்டித்து டிசம்பர் 24 அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து.

3) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம்.செல்வகணபதி தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் 11வது கூட்டம் தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைவர். முனைவர் அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் 15.12.2025 அன்று சென்னை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு. பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர்.என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் க.வீ.முரளிதரன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் இவ்வாரிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவினை அதிகரித்திடவும். நலத்திட்டங்கள் குறித்து மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மாநிலம் முழுவதும் 100 முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

### இளைஞர் எழுச்சிநாள் விளையாட்டு திருவிழா!

# கரூரில் கால்பந்து - இறகு பந்து போட்டி - பரிசுகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், டிச.21–

இளைஞர் எழுச்சி நாள் விழா விளையாட்டு திருவிழாவில் கால் பந்து இறகுபந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி பரிசுத்தொகை மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில் விளையாட்டு திருவிழா நடைபெற்று வருகிறது. தொடர் விளையாட்டு போட்டிகளில் ஒரு பகுதியாக, கரூர் பெரியார் வளைவில் உள்ள, போர்ட்டிலெவன் டர்ஃப் மைதானத்தில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக நடைபெற்ற, மொத்த பரிசுத்தொகை ரூ 70,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்கள் டர்ஃப் கால் பந்து போட்டிகளில் வென்ற அணிகளுக்கு பரிசுத்தொகையும் கோப்பைகளையும், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்.

முதல் பரிசை, UNI TEX XI FC அணியும், இரண்டாவது பரிசை BLUE FOX FC அணியும், மூன்றாம் பரிசை DBSS கரூர் அணியும், நான்காம் பரிசை GANDHI GRAM FC அணியினரும் வென்றனர்.

இதேபோன்று விளையாட்டு திருவிழாவில் ஒருபகுதியாக கரூர் ஆபிஸர்ஸ் கிளப் உள் விளையாட்டு அரங்கில் இறகு பந்துபோட்டிகள் நடைபெற்றன.

மொத்த பரிசுத்தொகை ரூ. 4,80,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்கள் இறகு பந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகையும், கோப்பைகளையும், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழங்கினார்.

U14 பிரிவில், பி. தருண், எஸ். சகா தயனேஷ், பி. அஸ்வத்தாமன் ஆகியோர் முதல் மூன்று பரிசுகளையும், U17 பிரிவில், எஸ். என். பிரணவ் கார்த்திக், எஸ். ஹர்ஷித், எஸ். தர்ஷன் ஆகியோர் முதல் மூன்று பரிசுகளையும், U19 பிரிவில், ஆர்.ஸ்ரீ ஹரிஹரன், எஸ். தர்ணிஷ், கே.ஜே. முகமது தன்வீர் ஆகியோர் முதல் மூன்று பரிசுகளையும், பொது பிரிவில், எஸ். அஜ்மல் முகமது ஏ. கணேஷ் குமார் அணி, பி. சசிதரன் பி.ஜித்தேஷ் பிரசன்னா அணி, வி.கே. அஜய் குமரன் கே. கோகுல் நாத் அணி முறையே முதல் மூன்று பரிசுகளையும் வென்றனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம், பாப்பாரப்பட்டி ஊராட்சியில் 87 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒன்பது கிராமங்களுக்கு குடிநீர் குழாய் மற்றும் மேல்நிலை நீர் தேக்கதொட்டி அமைக்கும் பணியினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான மதியழகன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இனமானப் பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி வழிகாட்டுதலின்படி, கரூர் கலைஞர் அறிவாலயம் முன்பு மாவட்ட அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் கழகத்தினர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பி. தம்பித்துரை
### டிசம்பர் 21 (1990)



“நெல்லை இரட்டையர்கள்” என்று அழைக்கப்பட்ட இரட்டையர்களில் இவரும் ஒருவர்.

கழகத்தில் தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளை வகித்தவர்.

கண்டிகைப் பேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – மானூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும் – திருநெல்வேலி நகராட்சி உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.